


**திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.,**
**மேலாண்மை இயக்குநர்,**
**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
**முதன்மை செயல் அலுவலர்,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**


எனதன்பார்ந்த சுய உதவி குழு தோழியர்களே,

மகளிரின் மேம்பாட்டிற்காக துவக்கப்பட்ட நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய பெண்களை குழுவாக ஒன்றிணைத்து, அவர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குதல், வங்கிக் கடன் பெற்றுத் தந்து தொழில் தொடங்க ஊக்குவித்து, தொழில் முனைவோர்களாக முன்னேற்றம் அடையச் செய்தல் போன்றவற்றை தனது தலையாய பணியாக மேற்கொண்டு வருகிறது.

மகளிர் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பெண்களின் முன்னேற்றத்திற்காக நமது நிறுவனம் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை தமிழகத்தின் கடைகோடியில் வசிக்கும் பெண்களிடமும் கொண்டு சேர்க்கும் உன்னத பணியை நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக செய்து வருகிறது.

> “பெண்களின் முன்னேற்றத்திற்காக நமது நிறுவனம் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது”

மேலும், நம் நிறுவனத்தின் துணை அமைப்புகளான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் போன்றவற்றின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுவினருக்கு தொழில் பயிற்சிகள் வழங்குதல், இயற்கை வேளாண்மை, வேளாண் கருவிகள் வாடகை மையம், மாடித் தோட்டம் அமைத்தல், ஒத்தத் தொழில் குழுக்களை உருவாக்குதல், நகர்ப்புற வாழ்வாதார மையம் அமைத்தல், தெருவோர வியாபாரிகளுக்கு கடன் உதவி பெற்றுத் தருதல், நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழைகளுக்கான உண்டு உறைவிடங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிராம திறன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, உரிய வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன. வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழை எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாடுகளுக்கு உரியவர்களாக இருக்கும் நீங்கள், இடையூறுகளையும், தடைகளையும் தகர்த்து மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(ம. பல்லவி பல்தேவ்)



## குறளும்-பொருளும்

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து**

நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும்
அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த
நினைப்பை விடக்கூடாது

## உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்... | 06 |
| சுய உதவிக்குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் ஆய்வு | 11 |
| சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடனுதவிகள் | 15 |
| வாழ்வாதாரத் தொழில் முன்னேற்றம் | 21 |
| தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் | 23 |
| முற்றக் கச்சேரி 2.0 | 26 |
| தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் | 28 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 32 |


கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவி குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல்
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

## twitter

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்கள் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர் கணக்கில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.”

*சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.*

*தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.*

*முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

ஆசிரியர் – முற்றம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ.15 மலர் 23 இதழ் 3 ஜூலை 2021



கௌரவ ஆசிரியர்கள்

திருமதி. **ம.பல்லவி பல்தேவ்,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தலைமை செயல் அலுவலர் (பொ)
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
திருமதி. **சி. சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர்,
**ஜே. கணேஷ் கண்ணா,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **எஸ்.கவிதா,** கூடுதல் இயக்குநர்,

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு
**ஸ்ரீ மூகாம்பிகை ஹைடெக் பிரிண்ட்ஸ்**



**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

ஆசிரியர், 'முற்றம்',
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412



**முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.**


## ஆசிரியரிடமிருந்து...

### எடுத்துக்காட்டான செயல்பாடுகள்...

**அன்புள்ள வாசகர்களுக்கு**

புதியதாக ஆட்சி பொறுப்பேற்ற தமிழக அரசின் சாதனைகள் அனைத்து தரப்பினராலும் பாராட்டும் விதத்தில் அமைந்துள்ளன. கொரோனா எனும் பெருந்தொற்றின் கோரப்பிடியில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த சூழலில் பதவி ஏற்பு நிகழ்ச்சியினை எவ்வித ஆர்ப்பாட்டமோ, கொண்டாட்டமோ இல்லாமல் மிக எளிமையாக நடத்தியது, இனி வரும் காலங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும்.


கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களை காப்பாற்றுவதே தனது முதல் கடமை எனக் கொண்டு, முதல்வராக பதவி ஏற்ற நிமிடம் முதல் பெருந்தொற்றை குறைக்க பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டது பாராட்டுதலுக்குரியது. முதல் பணியாக பல இலட்சம் குடும்பங்களுக்கு வாழ்வாதார இழப்பினை ஈடுசெய்வதற்கு ரூபாய் நான்காயிரம் மற்றும் பதினான்கு வகையான மளிகைப் பொருட்கள் வழங்கியது மக்களுக்கு பெரும் ஆறுதலாக உள்ளது.

அனைத்து கட்சியின் பிரதிநிதிகள், மருத்துவர்கள் மற்றும் வல்லுநர்களின் ஆலோசனையின்படி உயிர்களைக் காப்பாற்ற போதிய அளவிற்கு ஆக்சிஜன், பல ஆயிரக்கணக்கான படுக்கை வசதிகள், உடனடியாக பெற்றுக் கொள்வதற்கான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளுக்கான ஏற்பாடுகள் துரிதமாக செய்யப்பட்டதால் தொற்று பாதிப்பும், உயிர் இழப்பும் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்தையும் அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக ஆலோசனை குழுக்கள் அமைத்து, மக்களின் கருத்துக்களை கேட்டு அதன்படி செயல்படுத்தி வருவது மக்கள் ஆட்சியில் அதிகார பரவலுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தில் மருத்துவர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்று தொடங்கியது முதல், இன்று வரை முன் களப்பணியாளராக செயல்பட்டு, தங்களின் உயிர்களையே தியாகம் செய்த நூற்றுக்கணக்கான மருத்துவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், தங்கள் உயிரை பணயம் வைத்து சேவை செய்து கொண்டிருக்கின்ற மருத்துவர்களுக்கு நன்றியை சமர்ப்பிப்போம். அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு தமிழக முதல்வரே கொரோனா அவசர பிரிவிற்கு சென்று பார்வையிட்டது பாராட்ட தகுந்த ஒரு நடவடிக்கையாகும்.

கொரோனா பெருந்தொற்றை எதிர்த்து போராடுவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தாலும், மக்களின் முழு ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்த போராட்டத்தினை வெற்றி கொள்ள முடியாது.

*இப்படிக்கு,*



*(எஸ்.சின்னப்பன்)*
*ஆசிரியர், முற்றம்*

## ஊரகப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை விரைந்து மேம்படுத்திட வேண்டும் என ஊரக வளர்ச்சித்துறை ஆய்வுக் கூட்டத்தில் மாண்மிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல்




ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள், துறை மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம், புதிதாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் ஆகியவை குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 08.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊரகப் பகுதிகளிலும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் எவ்வித குறைபாடுமின்றி முழுமையாக கிடைக்கச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மூன்றடுக்கு ஊராட்சிகளின் செயல்பாடுகள், கிராம ஊராட்சிகளால் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகத் திட்டங்கள், தெரு விளக்குகள் பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் அடிப்படை வசதிகளுக்கான திட்டங்கள், ஜல்ஜீவன் மிஷன், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம், ஊரகத் தூய்மை பாரத இயக்கம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஊரக சாலைகள் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களான பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், நபார்டு உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி திட்டங்கள், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் ஆகிய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், தேவைப்படும் இடங்களில் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் அமைக்கும் திட்டங்களை வருங்காலங்களில் செயல்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களான, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டம் குறித்தும், சுய உதவிக் குழுக்கள் மூலம் ஊரக வாழ்வாதார மேம்பாடு குறித்தும், பல்வேறு திட்டப் பணிகளை ஒருங்கிணைத்து, வாழ்வாதார திட்ட செயல்பாடுகள் மூலம் தற்சார்பு பெற்ற கிராமங்களை உருவாக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி தலைமை இயக்குநர் (பயிற்சி) / கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் Dr.K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.06.2021 அன்று புதுடில்லியிலுள்ள பிரதமர் இல்லத்தில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை சந்தித்து, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்கள்.**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.06.2021 அன்று, சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்வித் தொலைக்காட்சியில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து பாடங்களுக்குமான நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.06.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 108 இலவச அவசர கால ஊர்தி சேவை பயன்பாட்டிற்காக கரூர் வைஸ்யா வங்கி வழங்கிய 10 அவசர கால ஊர்திகளின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி.செந்தில் பாலாஜி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.06.2021 அன்று, சென்னை, லாயிட்ஸ் காலனியில் அமைந்துள்ள 4 நியாயவிலைக் கடைகளுக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித் தொகை இரண்டாம் தவணையாக 2 ஆயிரம் ரூபாய் மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.06.2021 அன்று, சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா குழந்தைகள் சிறப்பு சிகிச்சை மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பரந்தாமன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.06.2021 அன்று, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில், விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. இ.பரந்தாமன், டாக்டர் என். எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. ரமேஷ்சந்த் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. என். ராமச்சந்திரன், செயற்குழு உறுப்பினர் திரு. ஆதவ் அர்ஜுன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



24.06.2021 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 17.06.2021 அன்று, புதுடில்லி தமிழ்நாடு இல்லத்தில், ஒன்றிய அரசின் பணியில் உள்ள தமிழ்நாடு பணிநிலைப் பிரிவைச் (Cadre) சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் இந்திய வனப் பணி அலுவலர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்தார்கள். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 29.06.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காண்பது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர், நில நிர்வாக ஆணையர், சமூக பாதுகாப்பு திட்ட ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அட்டை பட செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 25.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஊரக வளர்ச்சித் துறை பொறியாளர்கள், பணியாளர்கள் மற்றும் சிவகங்கை மாவட்ட பொதுமக்கள் அளித்த 23 இலட்சத்து 32 ஆயிரத்து 684 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.07.2021 அன்று திருவாரூர் மாவட்டம், வடுவூர், செருமங்கலத்தில் அமைந்துள்ள திருவாரூர் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பாரம்பரிய நெல் வகைகளைப் பார்வையிட்டார்கள். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. பூண்டி கலைவாணன், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. காயத்ரி கிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.06.2021 அன்று நந்தனம் அரசினர் ஆடவர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தால் பணி வாய்ப்பை இழந்த, குடும்ப அட்டை இல்லாத, புலம் பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு மற்றும் 1 கிலோ சமையல் எண்ணெய் ஆகிய உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.சண்முகம், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் ஆய்வு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும் **22.07.2021** அன்று கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளை பார்வையிட்டு, அவற்றின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கேட்டறிந்தனர். மேலும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகளும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்நிகழ்வுகளின் போது ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கொரோனா தொற்று தடுப்பு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம்




கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் **09.06.2021** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் கொரோனா தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் முனைவர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு.அமித் குஸ்வானா, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்




மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 03.07.2021 அன்று சென்னை, சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலகத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஊரக வளர்ச்சித் துறை (பயிற்சிகள்) இயக்குநர் ஜெனரல் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

## ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை சிறப்பாக செயல்படுத்த மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தல்

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 25.06.2021 அன்று சென்னை, சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலகத்தில் காணொலி காட்சி வாயிலாக அனைத்து மாவட்டங்களின் கூடுதல் ஆட்சியர்கள் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சி) மற்றும் அனைத்து அலுவலர்களிடமும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களின் ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சிகள் மேம்பாடு சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான அடிப்படைப் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி, அப்பணிகளை 100 சதவீதம் சிறப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள தொகுப்பு வீடுகள், சாலைப் பணிகள், குடிநீர் இணைப்புப் பணிகள், கழிப்பறை கட்டும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை விரைவுபடுத்தி முடிக்க வேண்டும் எனவும் ஆய்வின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பணிகளுடன் விவசாயம், கால்நடை, தோட்டக்கலை, பொதுப்பணித்துறை, சமூகநலம், ஆவின் போன்ற பிற துறைப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்பட்டு முழுமையான வளர்ச்சிக்கு ஊரக வளர்ச்சித் துறை அலுவர்கள் வழி காண வேண்டும் என மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்ர்.

இக்காணொலி ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr. K.கோபால், இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இஆப., மற்றும் அரசு உயரதிகாரிகள் பங்கேற்றனர்.






# வட்டார பெண் உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தை சேர்ந்தவர்களுக்கு பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதல்




மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 14.07.2021 அன்று தென்காசி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினார். ஆய்வினைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பெண்களால் நடத்தப்படும் சாய் அச்சக தொழிற்கூடத்தையும், மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட தானியங்கள், காய்கனிகள் மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியையும் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டார பெண் உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தை சேர்ந்த 600 நபர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr. K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.,, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கோபால சுந்தரராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்



ஊரக வளர்ச்சித் துறை மற்றும் மகளிர் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் 15.07.2021 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. எம். அப்பாவு அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும் இணைந்து திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி ஊராட்சியில், ரூர்பன் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் ஆயத்த ஆடை உற்பத்தி கூடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டாரம், மதவக்குறிச்சியில் செயல்பட்டு வரும் மண்புழு உற்பத்தி கூடம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து திருநெல்வேலி மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்தப் பொருட்களைப் பார்வையிட்ட மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழு மகளிரின் மீன் அங்காடியைத் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளின்போது ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr. K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி. விஷ்ணு, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்





# சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்குதல்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் ஊராட்சி மற்றும் செரப்பணஞ்சேரி ஊராட்சியிலும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்காடு ஊராட்சியிலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆகியோர் ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் ஊராட்சியில் வட்டார நாற்றங்கால், மாபெரும் மரக்கன்றுகள் நடுதல், நீர் உறிஞ்சும் அகழிகள் அமைத்தல், கசிவுநீர் குட்டை அமைத்தல் மண்புழு உரம் தயாரித்தல் பெரியார் நினைவு சமத்துவபுரம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், செரப்பணஞ்சேரி ஊராட்சி, ஆரம்பாக்கம் கிராமம், சகாய மாதா நகரில் “ஜல் ஜீவன் மிஷன்” திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகத்தை துவக்கி வைத்தனர். மேலும், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்காடு ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் பயிரிடப்பட்ட பல்வேறு கீரை வகைகளையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களின் கண்காட்சியையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர்.

தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.59.50 லட்சம் மதிப்பீட்டில் 5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடனும், சமுதாய முதலீட்டு நிதியுதவியின் மூலம் தலா ரூ.50 ஆயிரம் வீதம் 90 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவியும், சுயநிதி வழங்கும் திட்டத்தின்கீழ் தலா ரூ.15 ஆயிரம் வீதம் 60 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவியும், நலிவுற்றோர் நிதியுதவியின் கீழ் தலா ரூ.25 ஆயிரம் வீதம் 85 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவியும், தனிநபர் தொழில் முனைவோருக்கான நிதி உதவியின் கீழ் 50 நபர்களுக்கு ரூ.23.10 லட்சம் நிதியுதவியும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கு. செல்வப்பெருந்தகை, திரு.க.சுந்தர், திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பி.ஜெயசுதா, ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர் திரு. ஸ்ரீனிவாச ராவ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





## கோவிட் 19 - காய்ச்சல் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்



மதுரை மாவட்டத்தில் ஊராட்சி வாரியாக அனைத்து குக்கிராமங்களிலும் காய்ச்சல் கணக்கெடுப்பு பணியானது 3894 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் வீடுதோறும் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் கொரோனா நோய் தொற்று மற்றும் தடுப்பூசியின் பயன் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டதால், ஊரகப் பகுதிகளில் நோய் தொற்றானது வெகுவாக குறைக்கப்பட்டது.

காய்ச்சல் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிதியில் இருந்து வட்டியில்லாமல் ரூ.5,000/– முதல் ரூ.10,000/– வரை 3894 உறுப்பினர்களுக்கு ரூ.2.71 கோடி கடனாக மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி அவர்கள் மற்றும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தலைமையில் மதுரை கிழக்கு, மேலூர், திருப்பரங்குன்றம், அலங்காநல்லூர், திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். எஸ்.அனீஷ்சேகர், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஜி.செந்தில்குமாரி, நகராட்சி ஆணையாளர் திரு. எஸ்.விசாகன், சோழவந்தான் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. வெங்கடேசன், மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் மா.பிரபாகர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி வழங்குதல்



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. மா.மதிவேந்தன் அவர்கள் 06.07.2021 அன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 36 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1.58 கோடி நேரடி வங்கிக் கடனாக வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது, நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. மா. பிரியா, உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் 18.06.2021 அன்று செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு வருகை தந்து, தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் முதற்கட்டமாக செங்கல்பட்டு மாவட்டம், தண்டரை கிராமத்தில் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இருளர் பழங்குடி பெண்கள் நலச் சங்கத்திற்கு வருகை தந்து, அங்கு மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள், அதற்கான இயந்திரங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கேட்டறிந்த முதன்மை செயல் அலுவலர் அவர்கள், இக்குழுவின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு கண்காட்சிகளை நடத்தவும், ஏற்றுமதிக்கு உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், திருக்கழுக்குன்றம் வட்டம், குழிப்பந்தண்டலம் ஊராட்சியில் சிற்பத் தொழில் மேற்கொள்ளும் சிற்பக் கலைஞர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், ஊத்துக்காடு ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக சமுதாய முதலீட்டு நிதியாக தலா ரூ.50,000/– வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் கோவிட்–19 சிறப்பு நிதி தொகுப்பாக தலா ரூ.50,000/– வீதம் 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர் வாலாஜாபாத் ஒன்றியத்தில் உள்ள ஊத்துக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் இயற்கை முறையிலான கீரை வளர்ப்பினை பார்வையிட்ட முதன்மை செயல் அலுவலர் அவர்கள், கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

இந்த நிகழ்வுகளில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.ஆர்த்தி, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.ஆர்.ராகுல்நாத், இ.ஆ.ப., ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. அருள்ஜோதி அரசன், இணை இயக்குநர் திருமதி. மதுமிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாச ராவ், ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் திரு. ம. தினகர் ராஜ்குமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், ஆவின், தோட்டக்கலைத் துறை, வேளாண் துறை, மாவட்ட தொழில் மையம், விவசாய சந்தைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பேப்பர் பிளேட் உற்பத்தி அலகு பார்வையிடல்

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான முத்தையாபுரத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டார் பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் பேப்பர் பிளேட் உற்பத்தி அலகு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் திருமதி பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் 26.06.2021 அன்று இந்த அலகின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொது இடங்களில் கடைகள் அமைத்தல், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் பிராண்ட் பெயருடன் சந்தைப்படுத்துதல் போன்ற தொழில் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை வழங்கினார்கள்.



இந்நிகழ்வின்போது, தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே.பிச்சை, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில மேலாளர் திரு.சுபாஷ், ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாநில மேலாளர் திரு. கணேஷ், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர் திரு. விக்ரம்சிங் மற்றும் களப்பகுதி பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# உதவித் திட்ட அலுவலர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி முகாம்



தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் 25.06.2021 அன்று மதுரை மாவட்டத்தில் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது உதவித் திட்ட அலுவலர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி முகாமினைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

# அசோலா வளர்ப்பு குறித்த விளக்கப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், திருப்பத்தூர் மாவட்டத்தில், திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, கந்திலி, நாட்றாம்பள்ளி மற்றும் மாதனூர் ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த 136 ஊராட்சிகளைச் சேர்ந்த 136 பயனாளிகளுக்கு அசோலா வளர்ப்பு முறை மற்றும் அதன் பயன்கள் குறித்த விளக்கப் பயிற்சி, வேளாண்மை மற்றும் கால்நடைத்துறை உதவி இயக்குநர்களைக் கொண்டு வட்டார அளவில் நடத்தப்பட்டது.



இந்தப் பயிற்சியினை துவக்கி வைத்த திருப்பத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. உமா மகேஸ்வரி அவர்கள் பயிற்சியின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். அசோலா வளர்ப்பு சம்பந்தமான கேள்விகளுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை உதவி இயக்குநர்கள் விளக்கமளித்தனர்.

# மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குதல்

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் 05.07.2021 அன்று உதகை வட்டாரத்தில் உள்ள 15 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.68 கோடி மற்றும் 07.07.2021ல் குன்னூர் மற்றும் கோத்தகிரி வட்டாரங்களில் உள்ள 15 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.03 கோடி வங்கி கடன் இணைப்பு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப. அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின்போது நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.பாபு, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆகியோர் உடனிருந்தனர்.



## வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு



ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 25.06.2021 அன்று ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட கடலூர் மற்றும் ஓரனங்குடி ஆகியவற்றில் மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, கடலூர் மற்றும் ஓரனங்குடி கிராமங்களில் புலம் பெயர்ந்த இளைஞர்கள், மீன் வலை தயாரிப்பவர்கள், சிறு கடை நடத்துபவர்கள் ஆகியவர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கடல் பொருட்களிலிருந்து கலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியைப் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து, ஓரனங்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடி, பதிவேடுகளைப் பார்வையிட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வாழ்வாதார வளர்ச்சி பெற அறிவுறுத்தினார். இந்நிகழ்வின் போது, இராமநாதபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. தெய்வேந்திரன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 18.06.2021 அன்று, திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், தினைக்குளம் கிராமத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் கோவிட் நிதி உதவி தொகுப்பு மூலம் நிதியுதவி பெற்ற பனை ஓலை உற்பத்தியாளர் குழு பயனாளிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டார். உடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. தெய்வேந்திரன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளனர்.



# ஆகாயத் தாமரையிலிருந்து மதிப்பு கூட்டுப் பொருள் உற்பத்தி செய்தல் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், கொட்டாரக்குறிச்சி ஊராட்சியில் ஆகாயத் தாமரையிலிருந்து மதிப்பு கூட்டுப்பொருள் உற்பத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் 28.06.2021 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொட்டாரக்குறிச்சி கூட்டமைப்பு மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சித் தலைவர் (பயிற்சி) திரு. ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே.பிச்சை உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் களப்பகுதி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, சம்மந்தப்பட்ட திட்டங்களை செயல்படுத்தக் கூடிய துறைகளை ஒருங்கிணைத்து மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜி. எஸ். சமீரான், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 01.07.2021 அன்று நடைபெற்றது.




இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், ஆவின், கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம், மீன்வளத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், தாட்கோ, தேசிய சிறு தொழில் நிறுவனம், கிரிஷிக் விக்யான் கேந்திரா, கிராம சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம், வேளாண்மை சந்தை, மாவட்ட திறன் மேம்பாட்டுத் துறை, அறுவடை பின்சார் தொழில் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் ஆகியவற்றின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல்



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி.என்.ஸ்ரீதரன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் பல்வேறு வாழ்வாதார செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் முதற்கட்டமாக இந்திலி கிராமத்தில் கூட்டமைப்பின் மூலம் செயல்படும் இ–சேவை மையத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தொடர்ந்து இப்பகுதியில் செயல்படும் திருநங்கைகள் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தார்.

பின்னர் உளுந்தூர்பேட்டை ஏ. குமாரமங்கலம் கிராமத்தில் மண்பாண்டங்கள் தயாரிக்கும் சுய உதவிக் குழுக்கள், காட்டு நெமிலி கிராமத்தில் தென்னங்கீற்று முடையும் சுய உதவிக் குழுக்கள், திருநாவலூர் கிராமத்தில் சானிடரி நாப்கின் தயாரிக்கும் குழுக்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பார்வையிட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சுய உதவிக் குழுவினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு ரூ. 8.50 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வுகளின்போது, கள்ளக்குறிச்சி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு.தேவநாதன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் பார்வையிடல்



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் மற்றும் கொரோனா நோய்த் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு. எஸ்.எஸ். குமார் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் வாழவந்தி, வடவத்தூர் மற்றும் ஆ.மேட்டுப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் கள ஆய்வு மேற்கொண்டு, மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் நடமாடும் காய்கறி வாகனம், கிருமிநாசினியை உற்பத்தி செய்யும் ஸ்ரீ சக்தி அம்மன் மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றைப் பார்வையிட்டு, சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின்போது நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. மா. பிரியா, உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

# வாழ்வாதாரத் தொழில் முன்னேற்றம்

என் பெயர் கலைச்செல்வி (க/பெ. ராஜேந்திரன்), சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஒன்றியத்திலுள்ள, உரத்துப்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் நான், எங்கள் பகுதியில் செயல்படும் பிடாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் 12 வருடங்களாக உறுப்பினராக இருக்கிறேன். குழுவில் கடன் பெற்று கறவை மாடு வாங்கி வளர்த்து, பால் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறேன். உற்பத்தி செலவினங்கள் அதிகமானதால் குறைந்த வருமானம் பெற்று வந்தேன். மகளிர் திட்டத்தின் மூலமாக அசோலா பயிர் செய்யும் முறையும், பயன்படுத்தும் முறையும் பற்றி தெரிந்து கொண்டு, அதை உற்பத்தி செய்து கால்நடைகளுக்கு கொடுத்து வருகிறேன். இதன் காரணமாக பாலின் அடர்த்தி தன்மை அதிகரித்துள்ளதுடன், பாலும் 400 மில்லி முதல் 600 மில்லி வரை கூடுதலாக கிடைக்கிறது. அசோலா பயன்படுத்துவதால் அடர் தீவன செலவு குறைந்து, மாதத்திற்கு ரூ.1200/– வரை வருமானம் கூடியது. மேலும் திட்டத்தின் வழிகாட்டுதலில் பசுந் தீவனமாகிய சூப்பர்நேப்பியர் வகை புல்லினை தற்போது பயிரிட்டுள்ளேன். எனது வருவாய் பெருக வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# வாழ்க வையகம் மகளிர் சுய உதவிக்குழுவின் வெற்றிக் கதை



திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டாரம், செம்மிபாளையம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் வாழ்க வையகம் மகளிர் சுய உதவிக் குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். சுயமாகத் தொழில் மேற்கொள்ள வேண்டும் என தீர்மானித்த இக்குழுவின் உறுப்பினர்கள் பாக்கு மட்டை தயாரிக்கும் தொழில் குறித்த பயிற்சி பெற்று, ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வங்கிக் கடனாக ரூ.8 இலட்சமும், மாவட்ட தொழில் மையம் மூலம் ரூ.10 இலட்சம் மானியத்துடன் கூடிய கடனும் பெற்று, பாக்கு மட்டை தயாரிப்பு இயந்திரங்கள் வாங்கி, திருமதி. வசந்தி என்பவரின் மேற்பார்வையில் பாக்கு மட்டை தட்டுகளை உற்பத்தி செய்து, உள்ளூர் மற்றும், பல்லடம், கோயமுத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகின்றனர். இத்தொழில் மூலம் மாதந்தோறும் சராசரியாக ரூ.60,000/– வரை வருவாய் பெற்று வரும் இக்குழுவினர் நாளது வரை ரூ.13 இலட்சம் மதிப்பிலான பாக்குமட்டை தட்டுகளை விற்பனை செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (நபார்டு வங்கி) பங்களிப்பு...

NABARD

மத்திய அரசுக்கு முழுவதும் சொந்தமான முதன்மை வளர்ச்சி வங்கியான நபார்டு வங்கி, 1982ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு வேளாண் வளர்ச்சி மற்றும் ஊரக மேம்பாடு இரண்டையும் தன் இரு கண்களாகக் கொண்டு முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் மண்டல அலுவலகங்களையும், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி அலுவலகங்களையும் கொண்டு செயல்பட்டு வரும் நபார்டு வங்கி கடனுதவி, கூட்டுறவு மற்றும் கிராம வங்கிகளை ஆய்வு செய்தல், வளர்ச்சிப் பணிகள் என பல்வேறு வழிகளிலும் செயல்பட்டு வருகிறது.

நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத்தின் பங்களிப்பினை அதிகரிக்க பல்வேறு முயற்சிகளும் மத்திய, மாநில அரசுகளால் எடுக்கப்பட்டு வருகின்றன. இதை சுமார் கால் நூற்றாண்டு காலத்துக்கு முன்பாகவே நபார்டு வங்கி புரிந்து கொண்டு, "சுய உதவி குழு" என்னும் தத்துவத்தை நம் நாட்டில் அறிமுகப்படுத்தியது. கிராமப்புற பெண்கள் இணைந்து சிறு, சிறு குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு இடையே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து, அந்த சேமிப்பில் இருந்தே அவசரத் தேவைக்குக் கடன் கொடுத்து சுய உதவிக் குழுக்களும், அவற்றின் உறுப்பினர்களான கிராமப்புறப் பெண்களும் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்கத் துவங்கினார்கள். இதன் மூலமாக நாட்டில் பெண்கள் முன்னேற்றத்துக்கு ஒரு பலமான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது நபார்டு வங்கி.

சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களின் திறன் மேம்பாட்டுக்கு உரிய பயிற்சி அளித்து, சுய தொழில்களைத் தொடங்க வைத்து, அவர்களை சொந்தக் காலில் நிற்கச் செய்தது. சுய உதவிக் குழுக்களை வங்கிகளுடன் இணைத்து, அவர்களுக்குத் தொழில் துவக்குவதற்குத் தேவையான கடனுதவி கிடைக்க வழிசெய்யும் நபார்டு வங்கியின் "சுய உதவிக் குழுக்கள் வங்கி இணைப்புத் திட்டம்" இன்று உலகிலேயே மிகப் பெரிய வளர்ச்சித் திட்டம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

இன்று நாடு மின்னணுமயமாகி வரும் வேளையில், கிராமப்புற மகளிர் இணைந்து செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்களும் தங்கள் வரவு–செலவுகளை மின்னணு தளத்தில் பராமரிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே, நபார்டு வங்கி, அந்த முயற்சியின் முன்னோடியாக ஈ–சக்தி என்ற திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது. அதன் மூலமாக சுய உதவிக் குழுக்களின் வரவு–செலவு உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளும் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் தேவையான தொழில்நுட்பம் சம்மந்தப்பட்ட பயிற்சித்திறனை வளர்ப்பதற்காக எம்.ஈ.டி.பி. என்ற திட்டம் தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை இலவச நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலமாக பயிற்சி அளிப்பதோடு கடன் வாங்க உதவி செய்தல், சந்தைப்படுத்துதல் போன்ற செயல்களை சுய உதவிக் குழுக்கள் மூலமாக செயல்படுத்த தொண்டு நிறுவனங்களுக்கு ரூ. 10 லட்சம் வரை நபார்டு வங்கி மூலம் இலவச நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஈ–மதி / ஈ–சக்தி கூட்டு முயற்சி திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் நிலையில், சுய உதவிக் குழுக்களின் வரவு – செலவு மற்றும் இதர தகவல்களில் வெளிப்படைத்தன்மை ஏற்படும். அதன் மூலமாக, வங்கிகளுக்கு, சுய உதவிக் குழுக்கள் குறித்து தேவையான அனைத்து தகவல்களும் மிக எளிதில் கிடைக்கும். இதன் பலனாக, சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டினை எளிதில் ஆய்வு செய்து, வங்கி மேலாளர்கள் கடனுதவி வழங்க அதிக அளவில் முன்வருவார்கள். இது சுய உதவிக் குழுக்களின் வரலாற்றில் ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அரவணைப்பிலும், வங்கிகளின் கடனுதவியிலும், தொண்டு நிறுவனங்களின் வழிகாட்டுதலிலும் வளர்ச்சி பெற்று பெண்கள் சொந்தமாகத் தொழில்களைத் துவக்கி அதிக வருவாய் ஈட்டி, கிராமப்புறப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் நபார்டு வங்கி என்றென்றும் துணை நிற்கும் என்பதைத் கூறிக் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



டாக்டர். **ஜி.ஆர். சிந்தலா,**
தலைவர்,
தேசிய வேளாண்மை மற்றும்
ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு வங்கி)

# நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு



தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் 27.06.2021 அன்று விருதுநகர் மாவட்டத்தில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் முதற்கட்டமாக நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அவற்றில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் மூலம் தயாரிக்கப்படும் பொருட்கள் மற்றும் உணவுப் பண்டங்கள் நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் (CLC) மூலம் சந்தைப்படுத்தப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் வருவாய் மற்றும் இதர விபரங்களைக் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் நிதியுதவித் (PM-SVANidhi) திட்டத்தின் மூலம் ரூ. 10,000/– கடனாகப் பெற்று பல்வேறு தொழில்களை செய்து வரும் தெருவோர வியாபாரிகளை சந்தித்து, அவர்களின் தொழில் நடவடிக்கைகள் குறித்து கேட்ட பொழுது, முதல் கொரோனா தாக்குதலில் இருந்து தங்கள் தொழிலை மீட்டதற்கு இந்த நிதி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், இதுவரை 8 மாத தவணைகளை கட்டியுள்ளதாகவும், விரைவில் கடனை கட்டி முடித்தபின் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்களின் வழிகாட்டுதலில் மீண்டும் கடன் பெற்று, தொழிலை விரிவாக்கி தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம் என்றும், தங்களுக்கு கடன் வழங்கி தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் செயல் இயக்குநர் அவர்களிடம் தெருவோர வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் கூறினர்.

இந்த ஆய்வின்போது, விருதுநகர் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கணபதி நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில திட்ட மேலாளர் திரு. சுபாஷ், ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாநில மேலாளர் திரு. கணேஷ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.






தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் நகர்ப்புற வாழ்வாதார மையம், உழவர் மையம் ஆகியவற்றை பார்வையிட்டு, கள ஆய்வு செய்து, அப்பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகள் மற்றும் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வு செய்தார். இந்நிகழ்வின் போது மேற்படி மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில வல்லுநர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.








# மலர் மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

அரியலூர் நகராட்சியில் 10 உறுப்பினர்களைக் கொண்ட மலர் மகளிர் சுய உதவிக் குழு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் குழுக் கடனாக ரூ.2,00,000/– பெற்று சலவை சோப்பு பொருட்களை மொத்தமாக வாங்கி சில்லறையாகவும், மொத்தமாகவும் வியாபாரம் செய்து தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர். தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். தங்களுக்கு இவ்வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு மலர் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய வாழ்வாதார இயக்கம்

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி பேரூராட்சி பகுதியில் செயல்படும் முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, “நாங்கள் கடந்த 5 வருடங்களாக மண்பானை தயாரிக்கும் தொழிலை செய்து வருகின்றோம். எங்கள் பகுதியைச் சேர்ந்த சமுதாய வளப் பயிற்றுனரும், சமுதாய அமைப்பாளரும், சுய உதவிக் குழு அமைத்தல் குறித்தும், அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கிக் கூறினர். அதைத் தொடர்ந்து எங்கள் பகுதியில் மண்பானை தயாரிக்கும் தொழிலை செய்து வரும் 15 பெண்கள் ஒன்றிணைத்து ‘முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினை’ துவக்கினோம்.

குழு வரவு–செலவு கணக்குகளை முறையாகப் பராமரித்து வந்ததால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சுழல் நிதி மானியம் ரூ.10,000/– கிடைக்கப் பெற்றோம். அந்த மானியத் தொகையைக் கொண்டு பானை சுற்றும் சக்கர இயந்திரம் 5 வாங்கினோம். ஐசிஐசிஐ வங்கி மூலம் ரூ.1,30,000/– கடன் பெற்றோம். அந்தத் தொகையைக் கொண்டு மண் அரவை இயந்திரம் வாங்கி அதிகமான மண்பானைகளை தயாரித்து, அருகில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வதால், தற்போது வருவாய் அதிகரித்து, தினசரி எங்கள் குழுவிற்கு அதிக லாபம் கிடைக்கிறது. எங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு




எங்களது குழுவின் சார்பாக உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்’ என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

# தெருவோர வியாபாரிகளின் வளர்ச்சிக்கு உதவும் இயக்கம்



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், வேலம்பட்டி கிராமம், 45, திம்மிச்செட்டி தெருவில் வசித்து வரும் கௌரம்மாள் (க/பெ சின்னசாமி) ஆகிய நான், நாகோஜனஅள்ளி பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்–12 வேலம்பட்டி பகுதியில் காய்கறிக் கடை வைத்துள்ளேன். என் குடும்பத்தில் என்னைத் தவிர வேறு யாரும் வருமானம் ஈட்டுவதில்லை. கொரோனா ஊரடங்கு காலத்தில் போதுமான வருமானம் இல்லாததால், நானும் எனது குடும்பத்தாரும் மிகவும் கஷ்டத்துக்குள்ளானோம். தற்போது பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் நிதி (PM-SVANidhi) திட்டத்தின் மூலமாக ரூ.10,000/–த்தை வங்கியின் மூலம் கடனாகப் பெற்று, அந்தத் தொகையை எனது வியாபாரத்தில் முதலீடு செய்து போதுமான அளவு வருவாய் ஈட்டி வருகிறேன்.

என்னைப் போன்ற தெருவோர வியாபாரிகளின் மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தெருவோர வியாபாரிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# முற்றக் கச்சேரி 2.0



ஒஸ்மானாபாடி ஆடுகள்

கோழிகள்

'காசர்கோடு குட்டை' பசுக்கள்

## நிலைத்த வருவாய் தரும் ஒருங்கிணைந்த பண்ணைகள்...

பாதிரிவேடு கிராமத்தில் உள்ள பேச்சியம்மாளின் ஒருங்கிணைந்த பண்ணைக்கு, சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கிரிஜாவும், ரம்யாவும் வருகிறார்கள். அங்கே அவர்களுக்குள் நடந்த உரையாடலை முற்றக் கச்சேரியாக இங்கே வழங்கியுள்ளோம்.

பேச்சி : வா கிரிஜா... வா ரம்யா...

கிரிஜா : எப்படி பேச்சியக்கா இருக்குற ?

ரம்யா : நல்லா இருக்குறியா பேச்சி அக்கா ?

பேச்சி : நல்லா இருக்கேன்.... நீங்க ரெண்டு பேரும் எப்படி இருக்கீங்க ?

கிரிஜா, ரம்யா : நல்லா இருக்கிறோம்க்கா...

பேச்சி : ஆச்சிரியமா இருக்குது... ரெண்டு பேரும் திடிர்னு வந்திருக்கீங்க...

கிரிஜா : இல்லக்கா... இந்த வழியாக வந்தோம். சரி... அப்படியே பேச்சி அக்காவை பாத்துட்டு போகலாமேன்னு தோனிச்சி...அதான் வந்தோம்.

பேச்சி : ரொம்ப சந்தோசம். ஒரு நிமிடம் இருங்க வந்திடுறேன்.

பேச்சி இருவருக்கும் மோர் கொண்டு வந்து கொடுக்கிறாள்.

பேச்சி : இந்தாங்க வெயிலில் வந்துருக்கிறீங்க, இந்த மோரை சாப்பிடுங்க.

ரம்யா : தேங்க்ஸ்க்கா...

கிரிஜா : மோர் சூப்பராக இருக்குதுக்கா...

ரம்யா : சோளப்பயிர் தான் போட்டிருக்கிறேன்னு சொன்னீங்க... இங்கே பாத்தா கறவை மாடு, ஆடு, நாட்டு கோழி எல்லாமே இருக்குதே. என்னாச்சு அக்கா, ஏன் இதெல்லாம் வாங்கி விட்டுருக்கிறீங்க.

பேச்சி : அதுவாடி நம்ம APO சார் தான் அன்னைக்கு எங்களை கூட்டிக்குனு போயி ஒருங்கிணைந்த பண்ணை பற்றிய விளக்கம், அதுக்கான பயிற்சி எல்லாம் கொடுத்து, இந்த கறவை மாடு, ஆடு எல்லாம் வாங்க பேங்க் லோன் ஏற்பாடு செஞ்சுக் கொடுத்தார்.

கிரிஜா : ஓ அப்படியா....! ஒருங்கிணைந்த பண்ணைன்னா என்னக்கா ?

பேச்சி : எல்லாத்தையும் சொல்லறேண்டி...

கிரிஜா : வெறும் விவசாயம் மட்டும் செய்யாம, விவசாயத்தோட சேர்ந்து வளர்ப்பாகிய ஆடு, மாடு, கோழி, மீனுன்னு எல்லாத்தையும் வளர்க்கறதுதான், ஒருங்கிணைந்த பண்ணை முறை ஆகும். நான் சொல்லறது சரிதானே அக்கா ?

பேச்சி : ஆமாடி... நீ சொல்லறதுதான் ஒருங்கிணைந்த பண்ணையாகும்.

ரம்யா : சரிக்கா... எதுக்காக நாம இப்படி வளர்க்கணும். நம்ம புள்ளைங்கள பார்த்துக்குனு வெறும் விவசாயம் செய்யறதுக்கே நமக்கு நேரம் சரியாய் இருக்குது இதுல எங்க ஆடு, மாடுன்னு வளக்கறது.

பேச்சி : நீ சொல்லறது சரிதான் ரம்யா, புள்ளைங்கள பாத்துக்குன்னே பண்ணை வேலைகளை செய்யறதுக்கு நமக்கு நேரம் சரியாதான் இருக்குது. ஆனா வருசம் முழுக்க நமக்கு பயிர் விளைச்சல்ல இருந்து வருமானம் வராது இல்ல ?

கிரிஜா : ஆமாக்கா...

பேச்சி : அதுபோல வருசம் முழுக்க நமக்கு நிலையான வருமானம் வருவதற்கு தான் கால்நடைகளை சேர்த்து வளர்க்க சொல்றாங்க...

ரம்யா : சரிக்கா, இப்படி வளர்க்கறதுனால நமக்கு செலவு அதிகம் ஆகாதா அக்கா ?

பேச்சி : இல்ல ரம்யா, பயிருங்க கூடவே ஆடு மாடுகளையும் வளர்க்கறதனால நமக்கு செலவு குறையுது. இலாபம் கூடுது.

கிரிஜா : அது எப்படிக்கா ?

பேச்சி : அதாவது கிரிஜா... இந்த ஒருங்கிணைந்த பண்ணை முறையில, ஒன்றின் கழிவு மற்றொன்றுக்கு ஆகாரமாகவோ அல்லது இடுபொருளாகவோ பயன்படுத்தப்படுகிறது. அதனால தான் செலவு குறையுதுன்னு சொன்னேன்.

கிரிஜா : புரியலையே அக்கா...

பேச்சி : சரி புரியறமாதிரி சொல்றேன் கேளு... இப்ப பயிர் சாகுபடியில எது நமக்கு கழிவு பொருள் ?

ரம்யா : வைக்கோல் அல்லது தட்டை...

பேச்சி : சரி, அந்த வைக்கோல் மாடுகளுக்கு உணவாக பயன்படுகிறதா ? அதேபோல் மாட்டு சாணம் பயிர் சாகுபடிக்கு உரமாக பயன்படுகிறதா ?

கிரிஜா : அட, ஆமாம் அக்கா...!

பேச்சி : அதேபோல் ஆட்டு புழுக்கை பயிருக்கு ஏறு... அதேபோல் கோழிகளுக்கு ஆட்டுப் புழுக்கை, மாட்டு சாணம் ஆகியவற்றில் உள்ள புழுக்கள் உணவாகும்.

பேச்சி : இதனால் கால்நடைகளுக்கான தீவன செலவு குறையுது. மேலும் பயிர் சாகுபடி செலவும் குறையுது.

ரம்யா : ஆமாம் அக்கா நீங்க சொல்றது சரிதான்...

பேச்சி : மேலும் நம் பண்ணையில கிடைக்கிற மக்கும் குப்பைகளை சாணத்தோடு சேர்த்து மக்க வைக்கிறது மூலம் நமக்கு நல்ல தொழு உரம் கிடைக்குது.

பேச்சி : அதுமட்டுமில்லாம மண் புழு உரத்தையும் சாணத்தை பயன்படுத்தி பண்ணையிலேயே தயாரித்து பயிருக்கு இடுவதால பயிர் மகசூல் நல்லா அதிகரிக்குது...

கிரிஜா : ஆமாம் அக்கா, எங்க கிராம சமுதாய வள பயிற்றுனர் கூட மாடு வளர்த்தால் பஞ்சகவ்யம் எல்லாம் நாமே தயார் செய்யலாம்னு சொன்னாங்க அக்கா...

பேச்சி : ஆமாம், அவங்க சொல்றது கரெக்ட் தான் கிரிஜா.

ரம்யா : வெறும் பஞ்சகவ்யம் மட்டுமில்ல, ஜீவாமிர்தம், பூச்சி விரட்டி, நீர் மோர் கரைசல், மீன் அமிலம்னு எல்லாத்தையுமே பண்ணையிலேயே தயாரிச்சி, பயிர் சாகுபடிக்கு பயன் படுத்தலாம்.

கிரிஜா : சரிக்கா, இந்த ஒருங்கிணைந்த பண்ணையை யார் யாரெல்லாம் அமைக்கலாம் அக்கா ?

பேச்சி : குறைந்தது இரண்டு ஏக்கர் அல்லது அதற்கு மேல் நிலம் உள்ளவங்க இந்த ஒருங்கிணைந்த பண்ணைகளை அமைக்கலாம்

கிரிஜா : இந்தப் பண்ணைகளை அமைக்க யாரை கேக்கணும் அக்கா ?

பேச்சி : உங்கள் கிராமத்துல உள்ள சமுதாய வள பயிற்றுனர் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை அணுகி விவரங்களை தெரிஞ்சுக்கலாம்.

ரம்யா : சரிக்கா... ரொம்ப நன்றிக்கா.... நாங்க வரோம்.

கிரிஜா : நீங்க சொன்னது போல சமுதாய வள பயிற்றுனர் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை தொடர்பு கொள்கிறோம்.

பேச்சி : ரொம்ப சந்தோசம்பா...

ரம்யா : சரி கிரிஜா அக்கா போலாமா ? குழந்தையை தூங்க வைச்சுட்டு வந்தேன். இப்ப எழுந்திருக்கிற நேரம்.

கிரிஜா : போலாம்டி ரம்யா. சரி பேச்சி அக்கா நாங்க வரோம். உங்களை அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன்.

பேச்சி : சரி கிரிஜா... பாத்து போயிட்டு வாங்க...

கிரிஜாவும், ரம்யாவும் விடைபெற்று செல்கிறார்கள்.

(முற்றக் கச்சேரி தொடரும்)



# வானுயர் ஓங்க வள்ளுவர் அறவழி...!

பிறந்தவர் எல்லாம் பாரமாய் இருந்தால்
பிறந்த மண்ணின் பெருமைகள் உயருமோ...!
மறப்பார் எல்லாம் மண்ணில் வாழ்ந்தால்
மனிதனின் புகழும் நிலைத்து நிற்குமோ...!
பறவைகள் போல பாடித் திரிந்திட,
பாசம் பொழிய பண்பு வளர்ந்திட,
உறவுகள் கொண்டு உள்ளம் பூத்திட,
உண்மையாய் வாழ்ந்தால் இன்பம் பொங்கிடும்...!!

அன்பினில் எதையும் அடைந்திட இயலும்,
அகத்தின் வலிமையில் ஆயிரம் விளையும்,
என்றும் உயர்ந்திடும் எண்ணங்களோங்கிட
எழுச்சியின் வெற்றிகள் எதிலுமே உண்டு...!
நன்மைகள் பற்பல நாளுமே செய்து
நாட்டினில் புகழ்தனை நிலைத்திட வைத்தே
இன்முகம் கொண்டு இனியவை பேசி
இல்லற வாழ்வினில் ஏற்றங்களடைக,

அய்யன் வள்ளுவன் அறவழி இனிது;
ஆன்றோர் சான்றோர் அறிவுரை இனிது;
மெய்யது நிலைத்திடும் மேன்மையும் இனிது;
மென்மன உறவுகள் மலர்வதும் இனிது;
பெய்திடும் வான்மழைப் பெரும்பயன் இனிது;
பெருமைகள் சேர்த்திடும் பைந்தமிழ் இனிது;
வையத்தில் இனிது யாதென அறிந்து
வாழ்நெறி வகுத்து வானுயர் ஓங்கவே...!!



கவிஞர் பரந்தூர் இராமசாமி
அமிழ்தத் தமிழ் இல்லம்,
எண்.15, விவேகானந்தர் தெரு, கபிலர் நகர்,
மணவாள நகர் (அஞ்சல்) – 602 202.
திருவள்ளூர் மாவட்டம். தொடர்புக்கு : 90034 92723.

## நலமான வாழ்விற்கு கடைபிடிக்க வேண்டியவை

- உணவை நன்றாக மென்று கூழாக்கி சாப்பிட வேண்டும். (நொறுங்கத் தின்றால் நூறு வயது வரை வாழலாம். வெள்ளை அணுக்களுக்கு இணையாகப் பணியாற்றக் கூடிய உமிழ் நீர் கலந்த உணவு நன்கு செரிமானமாகும்)
- சாப்பிடும் முன் 30 நிமிடமும், சாப்பிடும்போதும், சாப்பிட்டபின் 30 நிமிடமும் தண்ணீர் குடிக்கக் கூடாது. (தேவைப்பட்டால், தொண்டையை நனைக்கும்படி சிறிது குடிக்கலாம். தண்ணீர் குடிப்பது செரிமானத்திற்காக உற்பத்தியாகும் அமிலத்தை நீர்த்து தீங்கை ஏற்படுத்தும்).
- சம்மணமிட்டு சாப்பிட வேண்டும். இது உடலில் பரவும் சக்தியை வயிற்றுப் பகுதியில் தடுத்து, தேக்கி செரிமானத்திற்கு உதவும். தண்ணீரைக் கொதிக்க வைத்தோ, வடிகட்டியோ குடிக்கலாம்.
- பசி வந்து சாப்பிட வேண்டும், தாகம் வந்து தண்ணீர் அருந்த வேண்டும், சோர்வு வந்து ஓய்வு எடுக்க வேண்டும், தூக்கம் வந்து தூங்க வேண்டும்.

# தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

## சவாலான கோவிட் காலங்களில் திட்டத்தின் வலிமையான செயல்பாடுகள்!



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் / தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபாத் வட்டாரத்தில் உள்ள ஊத்துக்காடு மற்றும் ஆனந்தலை ஆகிய கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் முதற்கட்டமாக ஸ்பைனாக் பொது வாழ்வாதார குழுவை பார்வையிட்ட தலைமை செயல் அலுவலர் அவர்களிடம், குழுவின் உறுப்பினர்கள் தங்கள் குழுவிற்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து ஆனந்தலை கிராம ஊராட்சியில் திட்டச் செயல்பாட்டாளர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தலைமை செயல் அலுவலர் அவர்கள், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தினை அனைத்து திட்டங்களையும் ஒன்றிணைப்பதை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய மைய புள்ளியாக செயல்படுத்துமாறு திட்ட செயல் அலுவலர்களிடம் அறிவுறுத்தியதுடன், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தில் கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவிலான முதலீட்டுத் திட்டங்கள் குறித்தும், ஊரகப் பகுதிகளில் உள்ள வளங்கள் குறித்தும், அரசாங்கத்தின் பல்வேறு சலுகைத் திட்டங்களைப் பெறுவதற்கு தொழில் முனைவோருக்கு உள்ள வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைத்ததுடன், இக்கூட்டங்கள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களிலும் தொடர்ந்து நடைபெறும் என்றும், இதன் மூலம் தொழில் முனைவோர் அரசுத் திட்டங்களைப் பெறுவதற்கு உள்ள இடைவெளியை நீக்கி தகுதியுள்ளவர்கள் பலன்களைப் பெறுவதற்கு வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஊரகப் பகுதிகளில் திட்டத்தின் உற்பத்தியாளர் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பானைகள், மூலிகை சுகாதார நேப்கின்ஸ், கைவினைப் பொருட்கள், சுருள் பாசி, மண்புழு உரங்கள், கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள், கீரை வகைகள் ஆகியவற்றினைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ம. ஆர்த்தி, இ.ஆ.ப., ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. அருள்ஜோதி அரசன், ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வளமானப் பணிகளும், பயணங்களும் தமிழ்நாட்டு மக்களுக்காக முழுமூச்சில் நடைபெற்று வருகின்றன.**

## இட்லி - வடை தரமானது! அதிக வாடிக்கையாளர் வரவானது!!



என் பெயர் சுஜாதா, ராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் வட்டாரம், சித்தாலம்பாடி கிராமத்தில் சிற்றுண்டி கடை நடத்தி வரும் நான், எனது கடையில் 5 இட்லி 1 வடை மற்றும் சுவையான சட்னி சாம்பாரை சேர்த்து 20 ரூபாய்க்குக் கொடுக்கின்றேன். கடந்த ஆண்டு கோவிட் பொதுமுடக்கத்திற்கு முன்னர் சாலையோரக் கடையைத் துவக்கி நடத்தி வந்தேன். 2020ஆம் ஆண்டு பொதுமுடக்கம் அறிவித்தபொழுது கடையை மூடிவிட்டதால், எனக்கு வந்துகொண்டிருந்த வருமானமும் நின்று விட்டது. சில மாதங்கள் கழித்து என் வீட்டிலேயே கடையை துவக்க திட்டமிட்டேன். மூலப்பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் தட்டுகளை வாங்குவதற்கு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ரூ.30,000/– கடனுதவி பெற்று, கடையைத் துவங்கி நடத்தி வரும் நான், தற்போது நாள் ஒன்றுக்கு ரூ. 400/– வரை வருவாய் பெற்று வருகிறேன். கோவிட் முன்னெச்சரிக்கை காரணமாக என் கடையில் அமர்ந்து சாப்பிட யாரையும் அனுமதிப்பது கிடையாது. பொட்டலம் கட்டிக் கொடுத்து விடுகின்றேன். எனது வாடிக்கையாளர்களிடம் அக்கறையாக பேசுவதுடன், பொது இடைவெளியையும் கடைப்பிடித்து கடையை சிறப்பாக நடத்தி வருகின்றேன். ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் உதவியுடன் எனது தொழிலை தன்னம்பிக்கையுடன் மேலும் வளமாக்குவேன்.

## தையலின் தையல்... மக்களின் மையல்...



என் பெயர் எஸ். நாகஜோதி, விருதுநகர் மாவட்டம், வள்ளியூரில் வசிக்கும் நான் தையல் ஆசிரியர் கல்வியையும், சணல் பைகள் தைக்கும் பயிற்சியையும் பெற்று, தையல் தொழிலை செய்து, ரவிக்கைகள், குர்த்தீஸ், புடவை ஓரம் தைத்தல் மற்றும் இன்னும் பிற மகளிர் ஆடைகளை தைத்து வந்தேன். ஆனால், 2020ஆம் ஆண்டு பொது முடக்கத்தின் போது வேலை அதிகம் வராததால் என்னால் பணியைத் தொடர முடியவில்லை. இருப்பினும் நான் ஒரு தொழில் முனைவோராக சாதிக்க விரும்பினேன். எனவே, தையல் குழுவை அமைக்கத் திட்டமிட்டு, அதற்குத் தேவையான முதலீட்டிற்காக ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் விண்ணப்பித்து, ரூ. 1 லட்சம் கடனுதவி பெற்றேன். இத்தொகையுடன் எனது சேமிப்பான ரூ.50,000/–த்தையும் சேர்த்து, 7 தையல் இயந்திரங்களை வாங்கி "ஜோதி கார்மெண்ட்ஸ்" என்ற தையல் நிறுவனத்தை பிப்ரவரி 2021ல் துவங்கினேன். என் நிறுவனத்தின் மூலம் பல்வேறு கட்சிகளுக்குத் தேவையான கொடிகளைத் தைத்து கொடுத்துள்ளேன். தற்பொழுது மருத்துவர்களுக்கு நீல நிற சூட், வெண்ணிற கோட் மற்றும் முகக்கவசங்களைத் தைத்துக் கொடுத்து வருகின்றேன். அருப்புக்கோட்டையிலுள்ள ஒரு தொழிற்சாலையிருந்து துண்டுகளைத் தைக்கும் வாய்ப்பைப் பெற்று, நூற்றுக்கணக்கான துண்டுகளை தைத்து கொடுத்து வருகின்றேன்.

எனது நிறுவனத்தில் அனைவருக்கும் ஊதியம் வழங்கியது போக, மாதம் ரூ. 6000/–லிருந்து ரூ. 7000/– வரை லாபம் சம்பாதிக்கின்றேன். வரும் காலங்களில் நல்ல வருமானத்தை ஈட்டும் வகையில் தொழிலில் முன்னேறுவேன். எனக்கு பல்வேறு வழிகளிலும் உதவி வரும் ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்... கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்...

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டாரம், தருவை ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் சுந்தரக்கனி. நான், என் வீட்டிலேயே பல்வேறு சிப்ஸ் வகைகளை தயாரித்து விற்பனை செய்வதுடன், பாளையங்கோட்டைப்பகுதியில் செயல்படும் சுமார் 30 கடைகளுக்கும் மொத்தமாக விற்பனை செய்கிறேன். கடந்த வருடம் கொரோனா பொது முடக்கத்தின் பொழுது சில மாதங்கள் நான் சிப்ஸ் உற்பத்தி தொழிலை நிறுத்தி விட்டேன்.

மீண்டும் நான் சிப்ஸ் தயாரிப்பினை தொடங்க எண்ணும்பொழுது, சிப்ஸ் தயாரிப்பதற்காக காய்களை மெல்லியதாக நறுக்கும் (razor-thin) இயந்திரத்தை ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழிகாட்டுதலில் பெற்ற கடனுதவியான ரூ. 40,000/–த்துடன், என்னுடைய சேமிப்பையும் சேர்த்து வாங்கினேன். இந்த இயந்திரத்தை வாங்குவதற்கு முன்னர் கையால் காய்களை சீவி சிப்ஸ் தயாரித்து வந்ததால் குறைவாகவே உற்பத்தி செய்தேன். தற்போது காய்களை சீவும் இயந்திரம் வாங்கிய பிறகு அதிகமாக உற்பத்திச் செய்து நாளொன்றுக்கு ரூ. 600/– வரை சம்பாதிக்கின்றேன். இந்த வருமானம் எனக்கு நிறைவாக இருக்கின்றது. தொழிலில் மேற்கொண்டு வளர முயற்சி எடுத்து வருகின்றேன். எனக்கு கடனுதவி வழங்கிய ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொழிலில் லட்சியம்... வெற்றி நிச்சயம்...!



திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் வட்டாரம், சேதுராப்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் ரேவதி. நான் 10 ஆண்டுகளாக மகளிர் ஆடைகளை தைத்து வருகிறேன். மகளிருக்கான அனைத்து வகையான ஆடைகளையும் தைக்கத் தெரியும். ஆரி எம்ப்ராய்டரி வேலைப்பாடுகளையும் நான் நன்கு செய்வேன். எங்கள் கிராமத்தைச் சுற்றி 8 கிராமங்கள் உள்ளன. அந்த கிராமங்களிலிருந்து எனக்கு நம்பிக்கையான தொடர் வாடிக்கையாளர்கள் உள்ளனர். இந்த தொழிலின் மூலம் கிடைத்த வருவாயில் நான் ரூ. 3 லட்சம் வரை சேமித்து வைத்திருந்தேன். எதிர்பாராத விதமாக 2020ல் கொரோனா ஊரடங்கின் காரணமாக சில மாதங்களுக்கு என் கடையை மூட வேண்டியிருந்தது.

நான் புதிய முயற்சியுடன் மீண்டும் தொழிலைத் துவங்க நினைத்தபொழுது என் சேமிப்பில் 3 லட்சம் மட்டுமே இருந்தது. அதனுடன் கூடுதலாக பணம் தேவைப்பட்டது. ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழிகாட்டுதலில் ரூ. 30,000/– கடனுதவிப் பெற்று, இரண்டுத் தொகையையும் சேர்த்து சொந்தமாக இடம் வாங்கி ஒரு தையல் கடை அமைத்துள்ளேன். மேலும் இந்தத் தொகையில் தையல் இயந்திரங்களை பழுது பார்க்கவும், புதிய இயந்திரங்களை வாங்கவும் பயன்படுத்திக் கொண்டேன்.

ரவிக்கை, பாவாடை, சல்வார் மற்றும் இன்னும் பல மகளிர் ஆடைகளைத் தைப்பதால் நான் எந்த மொத்தமான ஆர்டரையும் வாங்குவதில்லை. தற்பொழுது என்னிடம் நான்கு பெண்கள் வேலை செய்கின்றனர். என் சொந்தக் கட்டிடத்தில் கடை வைத்திருப்பதால் வாடகை, அட்வான்ஸ் போன்ற கட்டணங்கள் இல்லை. அனைவருக்கும் ஊதியம் அளித்தது போக மாதம் ரூ. 20,000 வரை சம்பாதிக்கின்றேன்.

தொழில் துறையில் சாதிக்க வேண்டும் என்கிற எனது லட்சியம் மெய்ப்பட காண்கிறேன்!

## கனவு மெய்ப்பட வேண்டும்... காரியத்தில் உறுதி வேண்டும்...



என் பெயர் பரணி, கடலூர் மாவட்டம், சிதம்பரம் பகுதி, பரங்கிப்பேட்டை வட்டாரம், குமாரமங்கலம் ஊராட்சியில் வசித்து வரும், நான் 2017 ஆம் ஆண்டு, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில், மருந்தகத்தில் டிப்ளோமா படிப்பு முடித்தப் பிறகு, புதுச்சேரியில் இரண்டு ஆண்டுகள் வேலை செய்து கொஞ்சம் பணம் சேமித்து வைத்திருந்தேன். 2020ஆம் ஆண்டு கொரோனா ஊரடங்கின் காரணமாக வேலை இழந்து வீட்டுக்குத் திரும்பினேன். எனது கிராமத்தில் வசிப்பவர்களுக்கு நல்ல மருந்துகள் கிடைப்பதற்காக பார்மஸி துவங்க விரும்பினேன். என்னிடம் சேமிப்புத் தொகையாக ரூ. 1.50 லட்சம் இருந்தது. ஆனால் அந்தத் தொகை பார்மஸி துவங்க போதுமானதாக இல்லை. எனவே தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் 1 லட்சம் ரூபாய் கடனுதவிப் பெற்று, 2020 நவம்பர் மாதம் மருந்துக் கடை துவங்கினேன். இந்தக் கடைக்கு மாதம் ரூ. 2,500/– வாடகை கொடுத்து வருகின்றேன்.

என் கடையில் அனைத்து வகை மருந்துகளும் உள்ளன. என் மருந்து கடைக்குள் கிளினிக்கும் திறந்திருக்கின்றேன். விரைவில் ஒரு மருத்துவர் குறைந்த கட்டணத்தில் பொது மருத்துவம் அளிப்பார். ஒரு மாதத்திற்கு ரூ. 16,000/– முதல் ரூ. 17,000/– வரை சம்பாதிக்கின்றேன். கையில் ரசீது எழுதிக் கொடுக்கப்படுவதில்லை அனைத்தும் கணினிமயமாக்கப்பட்ட ரசீது வழங்கும் முறை என்பதால் வாடிக்கையாளர்களுக்கு என் கடை மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

மருந்து ஏஜென்சிகளிடமிருந்து மருந்துகளை விலை பேசி வாங்கவும், அவற்றை விற்பதற்கும் கற்றுக்கொண்டுள்ளேன். 2 முதல் 3 கிலோமீட்டர் சுற்றளவிற்கு எனது மருந்துக்கடை மட்டுமே உள்ளது. சாதாரண லாபத்தில் மருந்து வழங்கும் சேவையில் உள்ள மதிப்பை நான் நன்கு அறிந்துள்ளேன். தற்போது வரை எங்கள் பகுதியில் லேப் இல்லை என்பதால், எனது கடைக்கு அருகாமையிலேயே லேப் கொண்டு வர நான் திட்டமிட்டுள்ளேன். அதற்கு தற்போது என்னிடம் நிதி இல்லை. அதற்கான நேரம் வரும் பொழுது என் கடை அருகில் லேப் அமைப்பேன். மருத்துவத் தொழிலில் ஒரு சாதனையாளராக மாறி எங்கள் ஊருக்குப் பெருமை சேர்ப்பேன்!

## கண்களைத் திறங்கள்... கனவினைக் காணுங்கள்...



என் பெயர் ஆனந்தி, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டாரம், வெள்ளனாம்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் நான், கண் மருத்துவர் ஒருவரிடமிருந்து கண் கண்ணாடிக் கடையை வாங்கி, 'சிட்டி ஆப்டிக்கல்ஸ்' என்று பெயரிட்டு நடத்தி வருகின்றேன். சிறிய கடையாக இருந்தாலும் சிறப்பாக இயங்கி வந்தது. 2020ல் கோவிட் பொதுமுடக்கம் காரணமாக சில மாதங்கள் கடையை மூடிவிட்டேன். மீண்டும் கடையைத் திறக்க எண்ணிய பொழுது, கடையை சற்று மேம்படுத்த நினைத்தேன்.

இதற்காக தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் கடனுதவியாகப் பெற்ற ரூ. 30,000/–த்துடன், என்னுடைய சேமிப்பான ரூ. 1 லட்சத்தையும் சேர்த்து கடையைப் புதுப்பித்து மேம்படுத்தினேன். தற்பொழுது இந்தக் கடையின் மூலம் மாதம் ரூ. 10,000/–த்திலிருந்து, ரூ. 15,000/– வரை வருவாய் பெருகின்றேன். நான் வாங்கிய கடன்களை திரும்ப செலுத்த வேண்டி இருப்பதால், மேலும் அதிக வருவாய் பெறுவதற்காக வயர் கூடைகள் பின்னுதல் மற்றும் தையல் வேலை ஆகியவற்றையும் செய்து, அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு, கடன்களைத் திரும்பச் செலுத்தி வருகிறேன். எனது தொழில் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவிய ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மகளிர் அதிகாரப் பகிர்வு...!

கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் வளர்ந்து வரும் சுய உதவி குழு இயக்கமானது, வங்கியுடன் இணைந்து கடன் பெற்று சுய தொழில் செய்து உயரவும், மகளிர் பொருளாதார விடுதலை பெறவும் உறுதுணையாக இருந்து வருகிறது.

பொதுத்துறை வங்கிகளில் முன்னணியில் உள்ள இந்தியன் வங்கி, மகளிருக்குக் கடனுதவி வழங்குவதிலும் முன்னணியில் உள்ளது. 1989ஆம் ஆண்டில், இந்தியன் வங்கி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, ஐக்கிய நாடுகளின் சபையின் ஒரு அங்கமான, சர்வதேச வேளாண் வளர்ச்சி நிதியத்தின் நிதியுதவியுடன் ''குழுக் கடன்'' திட்டத்தை நாட்டிலேயே முதன் முறையாக அறிமுகம் செய்தது.

அனைவருக்கும் வங்கி சேவைத் திட்டத்தில் சுய உதவி குழு உறுப்பினர்கள் இந்தியன் வங்கியின் ''வங்கி வணிகத் தொடர்பாளராகவும்'' மக்களுக்கு வங்கி சேவையாற்றி வருகிறார்கள். வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்பவும், அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் வங்கித் திட்டங்களை உருவாக்கி, இந்தியன் வங்கி அவற்றைச் செயல்படுத்தி வருகிறது. அவர்கள் தொழில் முனைவோராக உருவெடுக்க இந்தியன் வங்கி 'ஊரகப் பயிற்சி மையங்கள் மூலம்'' சுய தொழில் பயிற்சியும் வழங்கி வருகிறது.

கொரோனா கால கட்டத்தில் ஏற்பட்ட நிதி இழப்பை ஈடுகட்ட, இந்தியன் வங்கி ''கோவிட் (Covid-19) சகாயக் கடன் திட்டத்தை உருவாக்கி கடன் வழங்கி வருகிறது. மேலும் இந்தியன் வங்கி பராமரிக்கும் பிராந்திய கிராம வங்கியான, தமிழ்நாடு கிராம வங்கி மூலம் சுய உதவிக் குழுக்கள் பயன் பெறும் வண்ணம் கடன்கள் வழங்கப்படுகிறது.

அண்மையில், இந்தியன் வங்கி சுய உதவி குழு ''சக்தி'' கடன் திட்டம் மற்றும் சுய உதவி குழு ''நிர்மல்'' கடன் திட்டம் என்ற இரு புதிய திட்டங்களை, மகளிர் சுய உதவி குழுக்கள் பயன் பெற உருவாக்கியுள்ளது.

30.01.2021 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட சுய உதவி குழு ''சக்தி'' கடன் திட்டத்தின் மூலம், சுய தொழில் தொடங்கி, வாழ்வாதாரத்தை மேம்படுத்த சொத்துப் பிணையம் இல்லாமல் நீண்டகாலம் இயங்கி வரும் மகளிர் குழுக்களுக்கு ரூ. 10 லட்சத்துக்கு மேல் ரூ. 20 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

அதேபோல் 18.03.2021 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் சுய உதவி குழு ''நிர்மல்'' கடன் திட்டமானது, சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த நீண்டகாலம் செயலாற்றி வரும் சுய உதவி குழுக்கள் பயன் பெறும் வண்ணம் கழிவறைகள், நீர்தேக்கி, மேல்நிலை நீர்த்தொட்டி, கழிவு நீர் சுத்திகரிப்பு, நீர் வடிகட்டி / தூய்மையாக்க உதவும் திட்டம் ஆகியவற்றை நிறுவ உதவியளித்து வருகிறது.

மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் மேம்பாட்டிற்கும், நலிவடைந்தோர் பொருளாதார நிலை உயரவும், இந்தியன் வங்கி தமிழக அரசின் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து மகளிர் குழுக் கடன்களை சிறப்பாக வழங்கி வருகிறது.

2009 முதல் மகளிர் குழுக்களுக்குக் கடன் வழங்குவதில், முதன்மை வங்கியாக இந்தியன் வங்கி தொடர்ந்து விருது பெற்று வருகிறது. கடந்த 18 ஆண்டுகளாக இத்துறையின் சிறப்பான பங்களிப்பிற்காக, நபார்டு வங்கியின் விருது பெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தமிழகத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நின்று, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்ற நாம் இணைந்து செயல்படுவோம்! வெற்றி நமதே!!



திருமதி. **பத்மஜா சுந்துரு**
நிர்வாக இயக்குனர் மற்றும்
தலைமை செயல் அலுவலர்
இந்தியன் வங்கி

# கொரோனாவே உன்னை வெல்வோம்...!

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – அன்று
ஒன்று கூடினாலே இல்லை வாழ்வு – இன்று
வார விடுமுறைக்கு ஏங்கிய எங்களை
வாரம் முழுவதும் விடுமுறையாக்கி
வேலை நாட்களுக்கு ஏங்க வைத்த
'கொரோனாவே'

நல்லவர் கெட்டவர் பாகுபாடு இன்றி – நீ
அலை அலையாய் விளையாட இது கடல் அல்ல...
ஆசை ஆசையாய் வளர்த்த மனித உடல்...
பிராண வாயுவை தரும் மரங்களை அழித்த கொடுமைக்கு
வாயுவையே ஆயுதமாக்கி எங்களை அழிக்கிறாயா ?

'நோய் எதிர்ப்பு சக்தியின்' உன்னதம் உணர்ந்தோம்
போதும் விட்டு விடு...
மனதால் சோர்ந்த எங்கள்
உடலும் (உழைக்காமல்) சோர்ந்து விடும் முன்...

'கொரோனாவே'
எங்கள் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும்
பறித்த கொடூரனே...
ஒன்றுபடுவோம் உன்னை வெல்வோம்..!
உன்னை வெல்லும் நாள் – மிக அருகில்...!!

சு. தேன்ராஜ், உதவித் திட்ட அலுவலர்,
மகளிர் திட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## ( ஊரக வளர்ச்சித் துறை )

திரு. **பிரவீன் பி. நாயர்,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

**ஜி. முத்து மீனாள்**
கூடுதல் இயக்குநர்

**ஆர். ரவிச்சந்திரன்**
தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர்

## கொரோனா விழிப்புணர்வு மற்றும் வாழ்வாதாரத்தை மீட்கும் நடவடிக்கைகள்

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் தமிழகத்திலுள்ள கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 13 மாவட்டங்களில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது, திட்டப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்ட வாழ்வாதார இடர்பாடுகளை குறைக்கும் பொருட்டு சமுதாய பங்களிப்புடன் கூடிய துயர் குறைப்பு நிதியிலிருந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள், மீன் விற்பனை சங்கங்கள், மீன் விற்பனை செய்யும் பெண்கள் மற்றும் கடற்பாசி சேகரிப்போர் கூட்டு பொறுப்புக் குழு உறுப்பினர்கள் என 14,553 நபர்களுக்கு 6% வட்டியில் ரூ.1324 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில்சார் கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பாக ரூ.7956.87 இலட்சம் பெற்று தரப்பட்டு 26,971 மக்கள் பயன்பெற்று வருகின்றனர். திட்ட மேலாண்மை அலகுகள் மூலம் மாவட்ட வாரியாக கொரானா பெருந்தொற்று தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள், இலவச முகக் கவசங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து கோவிட்-19 முகாம் நடத்துதல்



செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்படும் சதுரங்கப்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சுகாதாரத்துறையுடன் இணைந்து, கோவிட்–19 சம்பந்தமாக முகக் கவசம் அணிவது மற்றும் பொது இடங்களில் சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டியதின் அவசியத்தை முகாம்கள் வாயிலாகவும், வீதி பிரசாரங்கள் மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது..

மேலும், சதுரங்கபட்டினம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்கள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் இணைந்து 10 கட்டங்களாக கோவிட்–19 தடுப்பூசி முகாமினை நடத்தியதன் மூலம் 45 வயதிற்கு மேற்பட்ட 1265 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

# கவிக்குயில் கூட்டு பொறுப்பு குழு மூலம் மீன் வியாபாரம் செய்து வரும் பயனாளிகளின் வெற்றி கதை






திருவள்ளூர் மாவட்டம், பூங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்குள் அடங்கிய சின்ன மாங்கோடு குப்பத்திலுள்ள தாமரை சுய உதவிக் குழு உறுப்பினர்களாகிய குமுதா, சோனியா, தேசம், சரசு மற்றும் வனரோஜா ஆகிய நாங்கள் ஐவரும் நமது திட்டத்தின் மூலம் கவிக்குயில் கூட்டு பொறுப்பு குழுவில் இணைந்து, தமிழ்நாடு கிராம வங்கியின் மூலம் முதல்கட்டமாக ரூ.2 இலட்சம் கடன் பெற்று முறையாக திருப்பம் செய்து, இரண்டாவது கட்டமாக ரூ.1,42,500/– கடன் பெற்று எங்கள் தொழிலுக்கு தேவையான உபகரணங்களை சொந்தமாக வாங்கி மீன் வியாபாரம் செய்து வருகின்றோம்.

நாங்கள் கூட்டு பொறுப்பு குழுவில் இணைவதற்கு முன் தனித் தனியாக, நாள் ஒன்றுக்கு 12% வட்டிக்கு ரூ.1000/– கடன் பெற்று தொழில் முடிந்தவுடன் ரூ.1120/– கொடுத்து வந்தோம். தற்போது அதிக வட்டியிலிருந்து எங்களை மீட்டு சொந்தமாக தொழில் நடத்த வழிவகை செய்து கொடுத்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.


# கூட்டு பொறுப்பு குழு மூலம் கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை



நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை ஊராட்சியில் கயல் கூட்டு பொறுப்பு குழு கடந்த 19.09.2018 அன்று முதல் கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனையை மேற்கொண்டு வருகின்றது.

நபர் ஒன்றுக்கு ரூ.2000/– முதல் 5000/– வரை மீன்களை கொள்முதல் செய்து, அதனை சுகாதார முறையில் சுத்தப்படுத்தி, உலர வைத்து மற்றும் பதப்படுத்தி ரூ.4000/– முதல் ரூ.6000/– வரை கருவாடுகளை விற்பனை செய்து நாள் ஒன்றுக்கு ரூ.500/– வரை ஒவ்வொரு நபரும் வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்தியன் வங்கி மூலம் முதல் கட்ட கடனாக ரூ.2 இலட்சம் பெற்று நல்ல முறையில் கடன் திருப்பம் செய்து, மறுகடனாக ரூ.2.50 இலட்சம் பெற விண்ணப்பித்துள்ளனர். கூலி வேலை செய்து வந்தவர்கள் இத்திட்டத்தின் மூலம் முதலாளிகளாக மாறி உள்ளதாக கூறினர்.

## கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்ள...



இருமல், தும்மல் உள்ளவர்களிடமிருந்து குறைந்தது ஒரு மீட்டர் இடைவெளி விட்டு நிற்கவும். அடிக்கடி கைகளை சோப்புப் போட்டு, நன்கு தேய்த்துக் கழுவவும். கைகளைக் கழுவாமல் கண்கள்,மூக்கு, வாயை தொடுவதைத் தவிர்க்கவும். இருமும் போதும், தும்மும் போதும் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை கொண்டு மூடிக்கொள்ளவும். நீங்கள் அணிந்திருக்கும் முகக் கவசமானது உங்களுடைய நாசி மற்றும் வாயை மூடும் விதத்திலும், உங்களுடைய முகவாய்க்குக் கீழ் கச்சிதமாக பொருத்தும் விதத்திலும், உங்களுடைய நாசியின் மேற்புறமாகவும், முகத்தின் இருபக்கங்களை ஒட்டியவாறும் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

# மீன் வலை பின்னும் தொழில் மூலம் வாழ்வாதாரம் பெற்றல்



என் பெயர் தவமணி. நான் தஞ்சாவூர் மாவட்டம், திருவத்தேவன் ஊராட்சியில் வாழ்ந்து வருகிறேன். மேலும், எங்கள் பகுதியில் செயல்படும் அம்மன் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகவும் உள்ளேன். குழுவின் வழிகாட்டுதலில் 5 பேர் கொண்ட கூட்டுப் பொறுப்பு குழு அமைத்து, அதன் மூலம் சுய தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேறலாம் என்று தீர்மானித்து, தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் வலை பின்னும் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு, பயிற்சிக்குப் பின் நாங்கள் 'வலம்புரி சங்கு வலைப் பின்னல் கூட்டுப் பொறுப்பு குழு' என்று பெயர் வைத்து வலைப்பின்னல் தொழில் செய்து வருகிறோம்.

இரண்டாம் புளிக்காடு இந்தியன் வங்கியில் ரூ.1.50 இலட்சம் கடன் பெற்றோம். நாங்கள் பின்னும் வலைகளை எங்கள் கடற்கரையோர மீனவர்களுக்கு குறிப்பிட்ட இலாபத்தில் விற்பனை செய்து வருகிறோம். இதன் மூலம் எங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடிகிறது. மேலும், இந்த தொழிலின் மூலம் எனது பங்கினை ஒரு வருவாயாக என் குடும்பத்திற்கு அளிக்க முடிகிறது. இதன் மூலம் எங்கள் குடும்பம் நிலைத்த வாழ்வாதாரத்தை அடைந்துள்ளது. எங்களுக்கு கடன் பெற உதவி செய்து, தொழிலை சிறப்பாக செய்ய எங்களை தொடர்ந்து கண்காணித்து எங்களுக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு மிகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# வருமானம் பெருக்கும் நடவடிக்கை மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளியின் வெற்றிக் கதை

என்னுடைய பெயர் ஜெயலட்சுமி, நான் கடலூர் மாவட்டம், திருச்சோபுரம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனது கணவர் இறந்து விட்டார். எனக்கு மூன்று பிள்ளைகள், நான் அவர்களை வளர்ப்பதற்கும், படிக்க வைப்பதற்கும் கஷ்டப்பட்டு வந்தேன். அந்த சமயத்தில், எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வருமானத்தை பெருக்கும் நடவடிக்கை திட்டத்தின் கீழ் ரூ.10,000/– கடன் பெற்று இட்லி கடை வைத்து நல்ல வருமானம் ஈட்டி வருகிறேன். அந்த வருமானத்தை வைத்து குடும்ப செலவு போக மீதமுள்ள பணத்தில் ஒரு சிறிய உணவு விடுதி நடத்தி வருகின்றேன். எனக்கு கடன் கொடுத்து என் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்ட தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.





Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (76,400 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,1 Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN